Tr.O.P.No.61/2023 தேதி – 17.02.2025

ம.சா.1–சந்தனம் செட்டியார்

2,3 எதிர்மனுதாரர்கள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி–

தர்மத்திற்கு எந்தெந்த சொத்துக்கள் கொடுக்கப்பட்டது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. என்னை தவிர வத்ராப்பில் சந்தனம் செட்டியார் என்று யாரும் கிடையாது. நான் வத்ராப்பில் முடுக்கு தெருவில் வசிக்கிறேன். நாங்கள் வாரிசுகள் என்பதை காட்டக்கூடிய ஆவணங்கள் கொடுத்துள்ளோம். நான் என் தந்தையின் இறப்பு சான்றிதழ் மற்றும் வாரிசு சான்றிதழை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். சுப்பன் செட்டியார் வகையறாவில் நான் வாரிசு என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மசா.ஆ.5, 6 ஆவணத்திற்கும் எங்களுடைய மூதாதையர்களுக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. ம.சா.ஆ.7 ஆவணத்திற்கும் எங்களுடைய மூதாதையர்களுக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. பிரமாண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள கொடி வழி ஜாவிதாவிற்கும் எங்களுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. 30 செண்ட் இடம் கோவில் தர்ம காரியத்திற்கு தான் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். டிரஸ்ட் பத்திரத்தில் வருடம் முழுவதும் அன்னதானமும், தண்ணீர் தர்மம் செய்யவேண்டும் என்று அதில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். 30 செண்ட் இடம் தவிர மற்ற இடங்களில் தர்ம காரியம் தொடர்ந்து நடைபெற்றுவருகிறது என்றால் அவ்வாறு எந்த தர்மகாரியமும் நடைபெறவில்லை. 30 செண்ட் இடம் தவிர மீதி இடங்கள் எதுவும் டிரஸ்டிகளால் விற்பனை செய்யப்படவில்லை என்றால் சரிதான், அது எங்கள் பெயருக்கு பட்டா வந்துவிட்டது. சதுரகிரி மகாலிங்க மூர்த்தி சுவாமிக்காக ஆடி அம்மாவாசை நவராத்திரி அன்னதான, தண்ணீர் தர்ம காரியங்கள் டிரஸ்ட் என்ற பெயரில் பட்டா போடப்பட்டுள்ளது. நான் தாக்கல் செய்த மனு சட்டப்படியும் நியாயப்படியும் நிலைநிற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. டிரஸ்ட் சட்டத்தின்

அடிப்படையில் தற்போது இந்த மனுவை தாக்கல் செய்ய எந்தவித நிர்பந்தமும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. இந்நாள்வரை தற்போது உள்ள டிரஸ்டிகள் அவர்கள் பணத்தை போட்டு தர்மகாரியங்கள் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. தர்மகாரியங்கள் செய்வதற்கு ஒதுக்கப்பட்ட சொத்திற்கும், 1ம் பிரதிவாதிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரிதான். ம.சா.ஆ.1 ஆவணத்தை நான் படித்துப் பார்த்துள்ளேனா என்றால் படிக்கவில்லை, எனக்கு படிக்கத்தெரியாது. எந்த பத்திரத்தின் அடிப்படையில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் ஸ்ரீவெங்கடாச்சல தேவரின் உறவினர்கள் பெயரில் பட்டா இருந்ததால் அதனை ரத்து செய்யக்கோரி தாலுகா, ஆர் டி ஓ, டி ஆர் ஓ ஆகிய அலுவலங்களில் சென்று மனுசெய்து பட்டா ரத்து செய்யப்பட்டது, அதன் அடிப்படையில் தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். ஸ்ரீவெங்கடாச்சல தேவர் டிரஸ்டி என்ற கோதாவில் தான் செயல்பட்டார் என்றும், அவர் கணக்குபிள்ளை என்ற விதத்தில் செயல்படவில்லை என்றால் சரியல்ல. டிரஸ்ட் ஆரம்பிக்கப்பட்டு அதன் நோக்கங்களுக்கு எதிராக யாரும் செயல்படாததால் அதனை எதிர்த்து யாரும் கேள்வி கேட்க முடியாது என்றால் சரியல்ல. இந்த வழக்கை தாக்கல் செய்ய எங்களுக்கு உரிமையே இல்லை என்றால் சரியல்ல. 1917 க்கு முன்னரே டிரஸ்ட் நடந்தது என்பதை காட்டக்கூடிய ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. இந்த மனு சட்டப்படிக்கும் நியாயப்படிக்கும் நிலைக்கத்தக்கதல்ல என்பதால் மனு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை – இல்லை.</u>